# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 20–ஆம் நாள், வியாழன்கிழமை

**REA. No. 09 of 2025 in REA. No. 06 of 2025**
**in**
**REP. No. 69 of 2000**
**in**
**O.S. No. 183 of 1994**
**(CNR No. TNSA13-000008-2000)**

1. ரகுபதி
2. ஜெயராக்கினி .. மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள்

எதிர்

1. பங்காருசாமி ரெட்டியார் (இறந்தவர்)
2. ராஜேஸ்வரி (இறந்தவர்) .. எதிர்மனுதாரர்கள் / மனுதாரர்கள்
3. K. ராகுல் .. தவறானதும், சொல்லப்படுவதுமான எதிர்மனுதாரர் / புதிய தரப்பினர்

இம்மனுவின் மீதான விசாரணையானது, இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்

*.. 2 …*

திரு. V.R. ராஜிந்திர மகாஜன் அவர்களும், 1, 2 எதிர்மனுதாரர்கள் காலமாகிவிட்ட நிலையில், தவறானதும், சொல்லப்படுவதுமான எதிர்மனுதாரர் / புதிய தரப்பினர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ராமமூர்த்தி அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>**உத்தரவு**</u>

REA.No.6/2025 மனுவில் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிருரையை ஏற்றுக்கொள்ள அனுமதி வேண்டி இம்மனுவை மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர்.

2. <u>**மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**</u> REA.No.6/2025 மனுவில் இம்மனுவின் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் தவறானதும் சொல்லப்படுவதுமான எதிர்மனுதாரர் / புதிய தரப்பினர் தரப்பில் தாக்கல் செய்துள்ள பொய்யாக உருவாக்கப்பட்ட பதிவு செய்யப்படாத உயில் சாசனம் பற்றிய சங்கதி குறித்து சொல்லாமல் விடுபட்டுள்ள விவரம் தற்பொழுதுதான் தெரியவந்ததாகவும், மேற்படி சங்கதிகள் குறித்து கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிருரையை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ளனர்.

3. <u>**3–ம் எதிர்மனுதாரர் / புதிய தரப்பினர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**</u> மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் மறுத்துள்ளார். மேலும், REA.No.6/2025 மனுவில் கடந்த

.. 3 …

14.07.2025 அன்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டதாகவும், பின்னிட்டு கடந்த 18.08.2025 அன்று மேற்படி மனுவில் முதல் கூடுதல் எதிருரை தாக்கல் செய்ததாகவும், அதன் பின்னர் கடந்த 13.11.2025 அன்று இரண்டாவது கூடுதல் எதிருரை தாக்கல் செய்ததாகவும், அசல் வழக்கு கடந்த 1994-ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு அதில் கடந்த 1999-ம் ஆண்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், அதன் பின்னிட்டு கடந்த 2000-ம் ஆண்டு நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், REP.69/2000 என்ற மனுவினை கடந்த 25 ஆண்டுகளாக மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் இழுத்தடித்து வருகின்றனர் என்றும், கடந்த 26 ஆண்டுகளாகவே தீர்ப்பாணை நடைமுறையில் உள்ளது என்றும், மேற்படி அ.வ.எண்.183/1994-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படி தீர்ப்புக்கடனாளி கிரயம் ஏற்படுத்திக்கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், 2-வது கூடுதல் பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள் என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

4. ***தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,***

மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

*.. 4 …*

6. **தீர்வு :**

1) மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தங்களுடைய மனுவில், REA.No.6/2025 மனுவில் இம்மனுவின் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் தவறானதும் சொல்லப்படுவதுமான எதிர்மனுதாரர் / புதிய தரப்பினர் தாக்கல் செய்துள்ள பொய்யாக உருவாக்கப்பட்ட பதிவு செய்யப்படாத உயில் சாசனம் பற்றிய சங்கதி குறித்து சொல்லாமல் விடுபட்டுள்ள விவரம் தற்பொழுதுதான் தெரியவந்ததாகவும், மேற்படி சங்கதிகள் குறித்து கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளனர். 3–ம் எதிர்மனுதாரர் / புதிய தரப்பினர் தன்னுடைய எதிருரையில், REA.No.6/2025 மனுவில் கடந்த 14.07.2025 அன்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டதாகவும், பின்னிட்டு கடந்த 18.08.2025 அன்று மேற்படி மனுவில் முதல் கூடுதல் எதிருரை தாக்கல் செய்ததாகவும், அதன் பின்னர் கடந்த 13.11.2025 அன்று இரண்டாவது கூடுதல் எதிருரை தாக்கல் செய்ததாகவும், அசல் வழக்கு கடந்த 1994–ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு அதில் கடந்த 1999–ம் ஆண்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், அதன் பின்னிட்டு தாக்கல் செய்த நிறைவேற்று மனு எண்.69/2000–ஐ கடந்த 25 ஆண்டுகளாக மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் இழுத்தடித்து வருகின்றனர் என்றும், அ.வ.எண்.183/1994–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படி தீர்ப்புக்கடனாளி கிரயம் ஏற்படுத்திக்கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், 2–வது கூடுதல் பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

2) மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் இம்மனுவை, REA.No.6/2025–ல் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிருரையை

.. 5 …

ஏற்றுக்கொள்ள அனுமதி வேண்டி தாக்கல் செய்துள்ளனர். மேலும் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தங்களுடைய மனுவில், 3–ம் எதிர்மனுதாரர் / புதிய தரப்பினர் தரப்பில் தாக்கல் செய்துள்ள பொய்யாக உருவாக்கப்பட்ட பதிவு செய்யப்படாத உயில் சாசனம் பற்றிய சங்கதி குறித்து சொல்லாமல் விடுபட்டுள்ள விவரம் தற்பொழுதுதான் தெரிய வந்ததாகவும், மேற்படி சங்கதிகள் குறித்து கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிருரையை ஏற்றுக்கொண்டால் தான் மனுவில் ஒரு இறுதியான அறுதியிட்ட முடிவிற்கு வர ஏதுவாக இருக்கும் என்று கூறியுள்ளதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது.

7. முடிவாக, மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 20–ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.20 18:13:52 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

*.. 6 …*

| | |
|---|---|
| **மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :** | இல்லை |
| **3–ம் எதிர்மனுதாரர் / புதிய தரப்பினர் தரப்பு சாட்சிகள் :** | இல்லை |
| **மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :** | இல்லை |
| **3–ம் எதிர்மனுதாரர் / புதிய தரப்பினர் தரப்பு சான்றாவணங்கள்:** | இல்லை |
| **நீதிமன்ற சாட்சிகள் :** | இல்லை |
| **நீதிமன்ற சான்றாவணங்கள் :** | இல்லை |

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.20 18:14:03 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**